**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 25/2021**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | DW.2 |
| NAME | காந்தன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 02.02.2026.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை :-**

நான் இந்த வழக்கில் 3ஆம் நபர். எனது தரப்பு சாட்சியாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் உள்ள விவரங்கள் தெரியும். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. வழக்கின் சங்கதி தெரியுமா என்றால் கிழக்கு மேற்கு 3–1/2 அடி, வடக்குபக்கம் 0 அதற்காக தான் இந்த வழக்கு. வழக்கின் சங்கதிகள் தெரியாது என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அவர் தாக்கல் செய்த வழக்கில் அவருடைய இடத்தில் 3 அடி அகலம் 5 அடி உயரம் உள்ள சுமார் 45 கிலோ உள்ள இரும்பு கதவை எடுக்க சொல்லி வழக்கு போட்டுள்ளார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. வாதி தாக்கல் செய்த வழக்கில் அவர் போட்டுள்ள பிவிசி பைப் மற்றும் புகைபோக்கியை எடுக்க சொல்லிதான் வழக்கு போட்டுள்ளார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.12/5–ல் பரப்பு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.12/5 எத்தனை மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு எப்போது விற்பனை செய்யப்பட்டது என தெரியுமா என்றால் தெரியாது.

3. பிரமாண வாக்குமூலத்தில் 1–1/2 அடி நீங்கலாக 12 அடி என சொல்லியுள்ள நிலையில் வடபுறம் எவ்வளவு காலியிடம் என சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலை துறையினர் பிரதிவாதி செய்த

ஆக்கிரமிப்புகளை அகற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். 1ஆம் பிரதிவாதி அவர் தாக்கல் செய்த வாக்குமூலத்தில் மேற்படி சர்வே எண்ணில் தென்புறம் 12 அடி, வடபுறம் 10 அடி, வடக்கு தெற்கு 60 அடியில் வீடுகட்டி கொண்டு இருப்பதாக சொல்லியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், சாட்சி தற்போது பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது தெரியாது என சொல்கிறார்.

4. 1ஆம் பிரதிவாதியின் தாயார் வசந்தாவை தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.3 ஆவணத்தின் படி கிழக்கு மேற்கு 10 அடியும், வடக்கு தெற்கு 60 அடியும் உள்ள கட்டிடத்தை தான் செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 17.12.1998–ல் வசந்தா வாங்கிய கிரயம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். பி.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்படி கிரயம் பற்றி சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

5. 1998 ஆவணம் கள்ள ஆவணம் என்றாலும் அதற்கு உடந்தையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வசந்தா தற்போது உயிரோடு உள்ளாரா என்றால் இருக்கிறார். அவர் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளாரா என்றால் இல்லை. 1998 ஆவணம் பொய்யான ஆவணம் என்பதால் வசந்தா சாட்சி சொல்ல வந்தாள் கண்டிக்கப்படுவார் என்பதால் அவர் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றாலும் அந்த ஆவணத்திற்கு உடந்தையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.